


**11. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **பிரதமர் திரு.நரேந்திரமோடி** 16-வது கட்ட **Rozgar வேலைவாய்ப்பு** முகாமில் 51 ஆயிரம் இளையோருக்கு நாளை பணிநியமன ஆணைகளை வழங்குகிறார்

2. **பருத்தி உற்பத்தியில் புரட்சியை ஏற்படுத்த** மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் அழைப்பு விடுத்துள்ளார்.

3. **உள்நாட்டு தொழில்நுட்ப மேம்பாட்டின்** அவசியத்தை தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித்தோவல் வலியுறுத்தி உள்ளார்.

4. **சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின்** 268-வது பிறந்த தினத்தை ஒட்டி மத்திய அமைச்சர் திரு. எல்.முருகன், முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

5. **இத்தாலி சேலஞ்சர் கோப்பை டென்னிஸ்** ஆடவர் ஒற்றையர் காலிறுதி சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - செக் குடியரசின் **Maxim -**மை இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖

**ரோஜ்கர் மேளா**

**பிரதமர் திரு. நரேந்திரமோடி** 16-வது கட்ட Rozgar Mela சிறப்பு வேலைவாய்ப்பு முகாமில் நாளை 51 ஆயிரம் இளையோருக்கு மத்திய அரசு பணியிடங்களில் பணியாற்றுவதற்கான நியமன ஆணைகளை காணொலி மூலம் வழங்கி உரையாற்றவுள்ளார்.

நாடுமுழுவதும் 47 இடங்களில் நடைபெறவுள்ள இந்த வேலைவாய்ப்பு முகாம்களில் மத்திய அமைச்சர்கள் அந்தந்த பகுதியில் இளையோருக்கு பணிநியமன ஆணைகளை வழங்குகின்றனர்.

தேச கட்டமைப்பில் இளையோர் பங்கேற்று ஆளுமை பெறும் வகையில், ரயில்வே, உள்துறை, அஞ்சல்துறை, சுகாதார குடும்பநலத்துறை, நிதிசேவை, தொழிலாளர் நலன் மற்றும் வேலைவாய்ப்புத் துறைகளில் பணியாற்றும் வகையில் இந்த நியமன ஆணைகள் வழங்கப்படவுள்ளன.

❖❖❖❖❖❖

**ஷிவ்ராஜ் சிங் சௌஹான்**

**பருத்தி உற்பத்தியில் புரட்சியை ஏற்படுத்த** மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சிங் சௌஹான் அழைப்பு விடுத்துள்ளார்.

கோவையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பருத்தி சாகுபடியில் காணப்படும் சவால்களை எதிர்கொண்டு, உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகள் குறித்து ஆராயப்படும் என்றார்

பருத்தியை தாக்கும் நோய்களுக்கு தீர்வுகாணவும், பருத்தி சார்ந்த தொழிலை முன்னெடுத்துச்செல்லவும் உறுதியளித்தார்.

வேளாண்மையில் அனைத்து அம்சங்களிலும் மத்திய அரசு அக்கறையுடன் இருப்பதாக கூறியஅவர், பருத்தி மதிப்புக்கூட்டு பொருட்கள் உற்பத்திக்கு கவனம் செலுத்தப்படும் என்றார்.

பருத்தி விவசாயிகள் மற்றும் இதுசார்ந்த அதிகாரிகள் இடையிலான கலந்துரையாடல்கள், விவசாயிகளுக்கு பயனளிப்பதோடு, இதன் மூலம் பருத்தி தொழில்சார்ந்த பொருளாதாரம் மேம்பட வழிவகை செய்யப்படும் என்றார்.

பருத்தி விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களுடன், விரிவான ஆலோசனைகளை அமைச்சர் இன்று மேற்கொள்கிறார்.

மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ் சிங்கும் இன்று பங்கேற்கிறார்.

முன்னதாக இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தை இன்று பார்வையிட்ட அமைச்சர், பருத்தி வேளாண்மைக்கு பயன்படுத்தப்படும் கருவிகளின் செயல்பாட்டை ஆய்வுசெய்தனர்.

பருத்தி சாகுபடி நிலத்தில் மரக்கன்றுகளை அமைச்சர்கள் நட்டுவைத்தனர்.

❖❖❖❖❖❖

**அஜித்தோவல்**

**உள்நாட்டு தொழில்நுட்ப மேம்பாடு** மிகவும் அவசியம் என்று தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜித்தோவல் தெரிவித்துள்ளார்.

சென்னை I.I.T. இந்திய தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தின் 62-வது பட்டமளிப்பு விழாவில் இன்று உரையாற்றியஅவர், உள்நாட்டு தளவாட உற்பத்தி அதிகரித்துள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் துல்லிய ராணுவ தாக்குதல் பற்றி எடுத்துரைத்த அவர், பாகிஸ்தானின் 9 தீவிரவாத முகாம்கள் வெறும் 28 நிமிடங்களிலேயே தகர்க்கப்பட்டதாக எடுத்துரைத்தார்.

பிரம்மோஸ், ரேடார், வான்படை தொழில்நுட்ப ஒருங்கிணைப்புடன் இந்த தாக்குதல் வெற்றிகரமாக நடைபெற்றதாக கூறினார்.

20247-ம் ஆண்டு வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க மாணாக்கருக்கு அழைப்பு விடுத்த அவர், புவிவளங்கள், செயற்கை நுண்ணறிவு குவாண்டம் கணினியை பயன்டுத்தி புதிய தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்க அறிவுறுத்தினார்.

நாடு இன்னும் 22 ஆண்டுகளில் சுதந்திர நூற்றாண்டு நிறைவை கொண்டாடும் போது இளையோர் திறன் வளர்ச்சியில் ஆற்றலுடன் திகழ்வார்கள் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்

நம்நாட்டின் பன்முக துறை தேவைகளை பூர்த்தி செய்ய இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் செயலாற்றி தேச கட்டமைப்பில் அளப்பறிய சேவையாற்ற வேண்டுமென்று திரு. அஜித் தோவல் கேட்டுக்கொண்டார்.

❖❖❖❖❖❖

**ஒரே நாடு ! ஒரே தேர்தல்**

**ஒரே நாடு ! ஒரே தேர்தல் ! தொடர்பான** நாடாளுமன்ற கூட்டுக்குழு கூட்டம், நாடாளுமன்ற வளாகத்தில் இன்று நடைபெற்றது.

மக்களவைக்கும், சட்டப்பேரவைகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்த ஏதுவாக அரசியல் சாசனத்தின் 129-வது பிரிவு மற்றும் யூனியன் பிரதேச சட்டத்திருத்தம் குறித்து 39 உறுப்பினர்களை கொண்ட நாடாளுமன்ற குழுவினர் விரிவான ஆலோசனைகளை மேற்கொண்டனர்.

மக்களவையிலிருந்து 27 உறுப்பினர்களும், மாநிலங்களவையிலிருந்து 12 உறுப்பினர்களும் இக்கூட்டுக்குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

❖❖❖❖❖❖

## இரண்டு ஆயிரம் ரூபாய்

**நாட்டில் 2 ஆயிரம் ரூபாய் நோட்டுகளின் புழக்கம்** இல்லாவிட்டாலும், அவை சட்டப்படி செல்லுபடியாகும் என்று ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு.சஞ்ய் மல்ஹோத்ரா தெரிவித்துள்ளார்.

நாட்டின் பொருளாதார வளர்ச்சி தொடர்பான நாடாளுமன்ற நிலைக்குழுவின் நிலைப்பாடுகள் குறித்த அறிக்கையில் ஆளுநர் இவ்வாறு கூறியுள்ளார்.

கள்ள நோட்டு புழக்கத்தை ஒழிக்க ரிசர்வ் வங்கியும், மத்திய அரசும் தொடர்ந்து உறுதியான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

## உலக மக்கள் தொகை தினம்

**உலக மக்கள் தொகை தினம் இன்று** கடைபிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா வெளியிட்டுள்ள செய்தியில் தாய்-சேய் ஆரோக்கியத்தை பேணி காக்க அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக கூறினார்.

நாடுமுழுவதும் விழிப்புணர்வு பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

தூத்துக்குடியில் உலக மக்கள்தொகை தின விழிப்புணர்வு பேரணியை இன்று தொடங்கிவைத்து பேசிய மாநில சமூகநலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் தமிழ்நாட்டில் குழந்தை திருமணங்களை **தடுக்க** அரசு பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருதாக் கூறினார்.

வீடுவீடாக சென்று பள்ளி கல்லூரி மாணாக்கரிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

**.. வாய்ஸ் ..**

விருதுநகர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மக்கள் தொகை விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் சுகபுத்ரா கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

நாகை, வேலூர், தர்மபுரி, சேலம் உள்ளிட்ட மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் மக்கள்தொகை விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

தாய், சேய் ஆரோக்கியத்தில் சுகாதாரம் மற்றும் கால இடைவெளியின் முக்கியத்துவம் என்பதை கருப்பொருளாக கொண்டு இந்த ஆண்டு இத்தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖

## முதலமைச்சர்

தமிழ்நாட்டில் இந்துசமய அறநிலையத்துறை சார்பில் 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில், ஆயிரம் ஆண்டுகள் பழமையான 63 திருக்கோவில்களை, புனரமைக்கும் திருப்பணிகளை முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின், சென்னை தலைமை செயலகத்திலிருந்து காணொலி வாயிலாக இன்று தொடங்கி வைத்தார்.

பள்ளிக்கல்வித்துறை சார்பில் பல்வேறு மாவட்டங்களில் 72 அரசு உயர்நிலை, மேல்நிலை பள்ளிகளில் 99 கோடியே 36 லட்சம் ரூபாய் மதிப்பிலான 472 முடிவடைந்த திட்டப்பணிகளையும் துவக்கி வைத்தார்.

ஊராட்சித்துறை அலுவலர்களின் பயன்பாட்டிற்காக 17 கோடியே 65 லட்சம் ரூபாய் மதிப்பிலான 198 வாகன சேவையை கொடியசைத்து தொடங்கி வைத்தார்

தமிழ்வளர்ச்சிக்கழகத்தின் பணிகள் தொய்வின்றி நடைபெற 2 கோடியே 15 லட்சம் ரூபாய்க்கான காசோலையையும் முதலமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖

**முதலமைச்சர் - அழகு முத்துக்கோனின்**

**சுதந்திர போராட்ட வீரர் அழகு முத்துக்கோனின்** 268-வது பிறந்த தினத்தை ஒட்டி மத்திய அமைச்சர் டாக்டர். எல்.முருகன், முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தியுள்ளனர்.

சென்னை எழும்பூரில் அழகு முத்துக்கோனின் திருவுருவப்படத்திற்கு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

மத்தியதகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் விடுத்துள்ள சமூக வலைதளப்பதிவில் வீரம் செறிந்த நம் முன்னோர்களின் வரலாறுகளை எதிர்கால தலைமுறையினருக்கு பயிற்றுவிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

தேச உணர்வுமிக்க சமுதாயத்தை உருவாக்கும் வகையில் மாவீரன் அழகு முத்துக்கோனின் தியாகங்களை போற்றி வணங்குவோம் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

இந்நாளையொட்டி வீரன் அழகு முத்துக்கோனின் சொந்த ஊரான தூத்துக்குடி மாவட்டம் கட்டாலங்குளத்தில் அமைந்துள்ள மணிமண்டபத்தில் அவரது திருவுருவச்சிலைக்கு மாநில அமைச்சர் திருமதி. கீதாஜீவன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு பி.ஜே.பி. மாநிலத் தலைவர் திரு.நயினார் நாகேந்திரன், மஹாராஷ்டிர ஆளுநர் திரு.சி.பி.ராதாகிருஷ்ணன் ஆகியோர் மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖

**சிவசங்கர்**

**அரியலூர் மாவட்டத்தில் 10 கோடி ரூபாய்** மதிப்பீட்டில் செயற்கை இழை ஹாக்கி விளையாட்டு மைதானம் அமைக்கும் பணியினை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் திரு.எஸ்.எஸ்.சிவசங்கர் இன்று தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் பேசியஅவர், இம்மைதானம் பயன்பாட்டிற்கு வரும்போது மாநில மற்றும் தேசிய அளவிலான ஹாக்கி போட்டிக்கு தேர்வு செய்யப்படும் அரியலூர் மாவட்டத்தை சேர்ந்தவர்களுக்கு இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று கூறினார்.

முன்னதாக அரியலூர் நகராட்சிக்கு உட்பட்ட பல்வேறு வார்டுகளில் 3 கோடியே 88 லட்ச ரூபாய் மதிப்பிலான சாலைகள் அமைக்கும் பணிகளை அமைச்சர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖

**குரூப் - 4 தேர்வு**

**தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம்** சார்பில் குரூப்-4 தேர்வு மாநிலம் முழுவதும் நாளை நடைபெறுகிறது.

மொத்தம் 3 ஆயிரத்து 935 பணியிடங்களுக்கு நடைபெறும் இத்தேர்வை 13 லட்சத்து 89 ஆயிரத்து 738 பேர் எழுதவுள்ளனர்.

இந்த தேர்விற்காக மாநிலம் முழுவதும் சிறப்பு முன்னோற்பாடுகளுடன் கூடுதல் பேருந்துகளும் இயக்கப்படுகின்றன.

கள்ளக்குறிச்சியில் குரூப்-4 தேர்வுக்கான முன்னேற்பாடுகள் குறித்து எமது செய்தியாளர் தெரிவிக்கையில்

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**வானிலை**

**மேற்குதிசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக** தமிழ்நாட்டில் அடுத்த 7 நாட்களுக்கு பரவலாக லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வுமைய இயக்குநர் திரு.செந்தாமரை கண்ணன் தெரிவித்துள்ளார்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**இத்தாலி சேலஞ்சர் கோப்பை டென்னிஸ்** போட்டியின் ஆடவர் ஒற்றையர் காலிறுதி சுற்றில் இந்தியாவின் சுமித்நாகல் - செக் குடியரசின் **Maxim** -மை இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖

**டெஸ்ட் கிரிக்கெட்**

**லண்டன் லார்ட்ஸில் நடைபெறும் இந்தியாவிற்கு** எதிரான 3-வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்டநேர இறுதியில் நேற்று இங்கிலாந்து தனது முதல் இன்னிங்சில் 4 விக்கெட் இழப்பிற்கு 251 ரன் எடுத்திருந்தது.

2-ம் நாள் ஆட்டம் இன்றுபிற்பகல் மூன்றரை மணிக்கு தொடர்ந்து நடைபெறும்.

❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖